மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 119 /2019

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.2.

---

பெயர். - திரு.அய்யாச்சாமி

த/பெ. - திரு.மாடசாமி

கிராமம் - கூசாலிபட்டி

தொழில் - சமூக ஆர்வலர்

தாலுகா - கோவில்பட்டி

வயது - 46.

1875-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.
பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
24.02.2025.